# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ **அதி விசேஷமானது**

අංක 2324/51 – 2023 මාර්තු මස 24 වැනි සිකුරාදා – 2023.03.24

***2324/51 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2012, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 1789/ 30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் பிரசுரிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 318 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

*ஹரின் பெர்னாண்டோ,*
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

*எனது இல. : 4-3/10/2012/*LRB*/14.*
*காணி எடுத்தல் உத்தியோகத்தரின் இல. :* WGSWD&EIP/ ACQ/KB/*02.*

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர", 1200/6,*
*ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,*
*2023, மாச்சு 15.*

***அட்டவணை***

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 533A ரத்தனபிட்டிய, 535D திவுலபிட்டிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பொரலெஸ்கமுவ, திவுலபிட்டிய நகர கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.07.01 ஆந் திகதிய, கொ. 9486 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தை கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

*01.* ***துண்டு இல. 49 - பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 23 ஐ கொண்ட காணி (ஒரு பகுதி) - விஸ்தீரணம் : 0.0002 ஹெக்டயார்***

*வடக்கு : துண்டு இல. 48 மற்றும் பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 23 ஐ கொண்ட காணி ; கிழக்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 23 மற்றும் 21 ஐ கொண்ட காணி ; தெற்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 21 ஐ கொண்ட காணி மற்றும் துண்டு இல. 51, 52 ; மேற்கு: துண்டு இல. 48.*

***02. துண்டு இல. 50 - பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 21 ஐ கொண்ட காணி (ஒரு பகுதி) - விஸ்தீரணம் : 0.0005 ஹெக்டயார்***

*வடக்கு : துண்டு இல. 48, 49 மற்றும் பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 23 ஐ கொண்ட காணி ; கிழக்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 21 ஐ கொண்ட காணி ; தெற்கு: எச். எம். டி. எச். டி. ஹந்தபான்கொட உரிமை கோரும் பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி மற்றும் துண்டு இல. 54 ; மேற்கு: துண்டு இல. 51.*

EOG *03-0326*